# முதலாம் தவணைப் பரீட்சை – 2020

## கிளி/திருவையாறு மகாவித்தியாலயம்

## தரம் - 09

| பாடம் : சங்கீதம் | நேரம் : 2 மணி | சுட்டெண்: |
|---|---|---|

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. ஒரு கதையைப் பாட்டுக்கள் மூலம் விளக்கும் நாடக வகை.

1. இசைநாடகம் 2. நாட்டிய நாடகம் 3. வில்லுப்பாட்டு 4. கதகளி

2. பாடல் ஒன்றை ஆக்கம் செய்து பாடும்போது மாணவர்களுக்கு ஏற்படும் திறன்விருத்தி.

1. பாடும்திறன் 2. ஆக்கத்திறன் 3. ஆற்றுகைத்திறன் 4. நடிக்கும் திறன்

3. ஜம்பை தாளத்தின் அங்க அடையாளம்.

1. 1100 2. 101 3. 1ᴗ0 4. 1011

4. திரியாங்கங்களையும் எடுத்துக் கொள்ளும் தாளம் எது?

1. அடதாளம் 2. ஜம்பைதாளம் 3. திரிபுடதாளம் 4. ஏகதாளம்

5. அலங்காரம் ஒன்றினை முதலாம் காலத்தில் பாடும்போது வரும் ஆவர்த்தனத்தின் எண்ணிக்கை.

1. 05 2. 10 3. 15 4. 12

6. “வா சரவணனே...” என்ற சஞ்சாரி கீதம் அமைந்த இராகம்.

1. மத்தியமாவதி 2. ஆரபி 3. ஹரிகாம்போஜி 4. மோகனம்

7. “ஸ்ரீராமா...” என்ற திவ்விய நாமக் கீர்த்தனையை இயற்றியவர்.

1. புரந்தரதாஸர் 2. பொன்னையாப்பிள்ளை 3. பிச்சையப்பா 4. தியாகராஜ சுவாமிகள்

8. “ஒடுங்கும்பிணி...” என்ற தேவாரம் அமைந்த பண்.

1. புறநீர்மை 2. பழம்பஞ்சுரம் 3. பஞ்சமம் 4. பழந்தக்கராகம்

9. “சந்தனத்தையே அரைத்து...” என்ற பாடலின் வகை.

1. கொழுந்துப்பாடல் 2. காவடிச்சிந்து 3. கீதம் 4. கும்மிப்பாடல்

10. துருவதாளத்தில் வரும் இறுதி லகுவை நீக்கினால் வரும் தாளம்.

1. மட்டியதாளம் 2. திரிபுடை தாளம் 3. அடதாளம் 4. ஏகதாளம்

11. வைதீக கானத்தைச் சேர்ந்த இசை உருப்படி எது?

1. வர்ணம் 2. கீர்த்தனை 3. கீதம் 4. ஸ்வரஜதி

12. 15 ஆவது மேளகர்த்தா இராகம் எது?

1. சங்கராபரணம் 2. மாயாமாளவகௌளை 3. கல்யாணி 4. மோகனம்

13. கர்நாடக இசையிலுள்ள ஜன ராகங்களின் மொத்த எண்ணிக்கை

1. 12 2. 07 3. 72 4. 65

14. பின்வருவனவற்றுள் ஜனக ராகம்.

1. சங்கராபரணம் 2. மோகனம் 3. ஆரபி 4. மத்தியமாவதி

15. ஜன்னிய இராகத்தின் மறுபெயர்.

1. தாய்ராகம் 2. சேய்ராகம் 3. ஜனகராகம் 4. மேளராகம்

16. மிகப் புராதன காலத்தில் இறைவழிபாட்டின்போது ஆலயங்களில் வாசிக்கப்பட்ட வாத்தியம்.

1. வீணை 2. யாழ் 3. வயலின் 4. மிருதங்கம்

17. ஆலயங்களில் அதிகாலையில் பாடப்படும் பாடல்.

1. திருப்பள்ளியெழுச்சி 2. திருவெம்பாவை 3. திருவாசகம் 4. தேவாரம்

18. இறைவனது ஐந்து திருமுகங்களையும் உருவகிக்கும் வாத்தியம்.

1. நாதஸ்வரம் 2. சங்கு 3. தவில் 4. பஞ்சமுக வாத்தியம்

19. தேவார முதலிகளில் முதன்மையானவர்.

1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரர் 3. திருநாவுக்கரசர் 4. மணிவாசகர்

20. மாயாமாளவகௌளை இராகத்தின் பண் எது?

1. புறநீர்மை 2. இந்தளம் 3. பழம்பஞ்சுரம் 4. பஞ்சமம்

(20 X 2 = 40 புள்ளி)

## பகுதி - II

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. ஹிந்துஸ்தானி இசையில் பைரவ தாட் என அழைக்கப்படும் இராகம் ஏது?

2. அந்த இராகத்தின் ஆரோகண, அவரோகணங்களைத் தருக?

3. அந்த இராகத்தின் ஸ்வரதானங்களைத் தருக?

4. அந்த இராகத்தில் அமைந்த இசை உருப்படிகள் 2 தருக?

5. அவ் இராகத்தின் ஜீவ ஸ்வரங்கள் எவை?

(2+2+7+2+2 = 15 புள்ளி)

**02.** 1. திரியாங்கங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் தருக?

2. திரியாங்கங்களின் எண்ணிக்கையில் மாற்றமடையும் அங்கம் எது?

3. சப்த தாளங்களையும் அங்க அடையாளங்களையும் தருக?

4. அட தாளத்தில் வரும் முதல் லகுவை நீக்கினால் வரும் தாளம் எது?

5. ஒரு அங்கத்தையுடைய தாளம் எது?

(3+2+7+2+1 = 15 புள்ளி)

**03.** கீர்த்தனை என்ற இசை உருப்படியின் இலட்சணத்தை விளக்குக.

(15 புள்ளி)

**04.** 1. கர்நாடக இசையிலுள்ள ஜனக இராகங்கள் எத்தனை?

2. ஜனக இராகத்தின் மறுபெயர்கள் 5 தருக?

3. ஜனக இராகங்களின் நான்கு இலட்சணங்களையும் தருக?

(2+5+8 = 15 புள்ளி)

**05.** ஆலயங்கள் ஊடாக இசை வளர்ச்சி பற்றி விளக்குக.

(15 புள்ளி)

**06.** நீர் கற்ற ஜம்பைதாள அலங்காரத்தினை இராகம், தாளம், இயற்றியவர், மொத்த அட்சரம், அங்க அடையாளங்கள் என்பவற்றுடன் கிரமமாக எழுதுக.

(இராகம், தாளம், இயற்றியவர், மொத்த அட்சரம், அங்க அடையாளம்) (5 புள்ளி)

அலங்காரம் (10 புள்ளி)